V7T

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறி தேர்வு - செப்டம்பர் 2023

-----

## வகுப்பு 7

## தமிழ்

நேரம்: 2.00 மணி

மதிப்பெண்கள்: 60

### பகுதி - 1

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **4×1=4**

1) 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ...............

அ) வழி ஆ) பொருள் இ) கொள்கை ஈ) அறம்

2) வானில் ............... கூட்டம் திரண்டால் மழை பொழியும்.

அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில்

3) நேற்று+இரவு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...............

அ) நேற்று இரவு ஆ) நேற்றிரவு இ) நேற்றுரவு ஈ) நேற்இரவு

4) நுனிக்கிளை என்பது ...............

அ) இலக்கணமுடையது ஆ) மரூஉ

இ) இடக்கரடக்கல் ஈ) இலக்கணப்போலி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:** **2×1=2**

5) முத்துராமலிங்கத்தேவர் முதன் முதலில் உரையாற்றிய இடம் ...............

6) தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் ...............

**III. பொருத்துக:** **4×1=4**

7) நாமக்கல் கவிஞா - சுரதா

8) பகுத்தறிவுக் கவிராயர் - இரா.பி. சேது

9) உவமைக் கவிஞர் - உடுமலை நாராயண கவி

10) சொல்லின் செல்வர் - காந்தியக் கவிஞர்

### பகுதி - 2

**IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** **5×2=10**

11) பேச்சுமொழி என்றால் என்ன?

12) காட்டின் பயன்களாக கவிஞர் சுரதா கூறுவன யாவை?

13) யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?

14) வாழும் நெறி யாது?

15) குற்றியலிகரம் என்றால் என்ன?

16) வழக்கு என்றால் என்ன?

17) தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?

**V. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்கவும்:** **3×4=12**

18) தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

19) கிளை மொழிகள் எவ்வாறு உருவாகின்றன?

20) காடு பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவது யாது?

21) மகரக் குறுக்கத்துக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

22) பாஞ்சாலங்குறிச்சியின் வீடுகள் எவ்வாறு இருக்கும்?

## பகுதி - 3

**VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 10×1=10

23) **கோடிட்ட இடங்களை தமிழ் எண் கொண்டு நிரப்புக:**

அ) எனக்கு வயது ...............

ஆ) தமிழ் இலக்கணம் .............. வகைப்படும்.

24) **பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக:**

பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு ..............

25) **தொகைச் சொற்களை விரித்து எழுதுக:**

முக்கனி ...............

26) **பிழையை திருத்தி சரியாக எழுதுக:**

குழலி நடனம் ஆடியது.

27) 'கால் கழுவி வந்தான்' - எவ்வகைத் தகுதி வழக்கு?

28) அகம் என முடியும் இரண்டு சொற்கள் எழுதுக.

29) **இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்கு:**

கண், அழகு

30) **கலைச்சொல் தருக:**

அ) Jungle

ஆ) Parable

31) **விடுகதைக்கு விடை எழுது:**

வெள்ளையாய் இருப்பேன் - பாலல்ல

மீன் பிடிப்பேன் - தூண்டில் அல்ல

தவமிருப்பேன் - முனிவர் அல்ல - நான் யார்?

32) **உயர்திணையை எடுத்து எழுது:**

மாணவன், கல், பசு, மக்கள்

## பகுதி - 4

**VII. மனப்பாடப் பாடல்:** 4+2=6

33) "அருள்நெறி அறிவைத் ..........." எனத் தொடங்கி 'அன்பறமே' என முடியும் வரையுள்ள எங்கள் தமிழ் பாடலை எழுது.

34) 'வாய்மை' - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**VIII. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:** 2×6=12

35) பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள சொலவடைகளில் எவையேனும் ஐந்தை தெரிவு செய்து சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

**(அல்லது)**

ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

36) நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

நான் விரும்பும் தலைவர் - என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

----------